13

**சுருக்கம்**

தொழில்நுட்பக் கல்வி துறை – உடனடித் தேர்வில் H.S.C. தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் நேரடி இரண்டாமாண்டில் சேர்ந்து கல்வியை தொடர அனுமதி அளித்தல் – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

**உயர்கல்வித் (பி1) துறை**

**அரசாணை (நிலை) எண்.47** **நாள்: 05.03.2020**

விகாரி வருடம், மாசி 22,
திருவள்ளுவர் ஆண்டு 2051.
படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்.360, உயர்கல்வித் (பி2) துறை, நாள் 05.09.2008.
2. தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் கடிதம் எண்.11674/ஐ–1/2019, நாள் 25.10.2019.

-----

**ஆணை:**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் S.S.L.C. உடனடி தேர்வில் தேர்வு பெற்ற மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு, பல்தொழில்நுட்பப் பயிலகங்களில் உள்ள காலியிடங்களை கருத்தில் கொண்டும், உடனடி தேர்வில் தேர்ச்சி பெற்று தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேரும் மாணவர்களுக்கு வருகை நாட்களில் முதல் பருவத்திற்கு விதிவிலக்கு அளிக்காமல் விடுமுறை நாட்களையும் சேர்த்து வகுப்புகள் நடத்த முடிந்தால் மாணவர்கள் சேர்க்கைக்கு அனுமதி அளித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் அரசாணை (நிலை) எண்.360, உயர்கல்வித் (பி2) துறை, நாள் 05.09.2008–ன் படி, உடனடி தேர்வில் S.S.L.C. அதாவது 10–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு அந்தந்த ஆண்டிலேயே பாலிடெக்னிக் கல்லூரியில் முதலாம் ஆண்டு சேர்ந்து கல்வியை தொடர வாய்ப்பளிக்கப்பட்டு வருகிறது என்றும், இதேபோன்று மேல்நிலை வகுப்பில் உடனடித்தேர்வு எழுதி தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு அந்தந்த கல்வியாண்டிலேயே பாலிடெக்னிக் கல்லூரிகளில் நேரடி இரண்டாமாண்டு பட்டயப்படிப்பில் சேர்ந்து பயில கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளது என்றும், எனவே உடனடித் தேர்வு நடத்துவதின் நோக்கத்தினை கருத்தில் கொண்டும், அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் உள்ள காலியிடங்களை கருத்தில் கொண்டும், உடனடித் தேர்வில் +2 தேர்ச்சி பெற்ற மாணவர்கள் அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் நேரடி இரண்டாமாண்டு சேர்ந்து பயில வாய்ப்பளித்து ஆணைகள் வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும் இவ்வாறு சேரும் மாணவர்களுக்கு வருகை நாட்களில் மூன்றாம் பருவத்தில் விதிவிலக்கு அளிக்காமல் விடுமுறை நாட்களில் வகுப்புகள் நடத்தி வருகை நாட்கள் ஈடுசெய்யப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

....2

3. தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, உடனடி தேர்வில் தேர்வு பெற்ற HSC (+2) மாணவர்களின் நலன் மற்றும் அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் உள்ள காலியிடங்களை கருத்தில் கொண்டும், மாணவர்களின் நலன் கருதி உடனடி தேர்வு நடத்துவதன் நோக்கத்தினை கருத்தில் கொண்டும் உடனடி தேர்வில் +2 தேர்ச்சி பெற்ற மாணவர்கள் பாலிடெக்னிக் கல்லூரிகளில் நேரடி இரண்டாமாண்டில் சேர்ந்து பயிலும் பட்சத்தில், அவ்வாறு சேரும் மாணவர்களுக்கு வருகை நாட்களில் மூன்றாம் பருவத்தில் விதிவிலக்கு அளிக்காமல் விடுமுறை நாட்களில் வகுப்புகள் நடத்தி வருகை நாட்களை ஈடுசெய்ய முடியும் பட்சத்தில், உடனடி தேர்வில் +2 தேர்ச்சி பெற்ற மாணவர்களை அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் நேரடி இரண்டாமாண்டு சேர்ந்து பயில அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை – 25.
<u>நகல்</u>:
உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
உயர்கல்வித் துறை, முதன்மைச் செயலாளர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
இ.கோ/உதிரி.

/ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

5.3.2020
பிரிவு அலுவலர்.